TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XII.] AUGUST, 1912-௵ ஆகஸ்ற்று௴. [இலக்கம் 3.

தேச பாஷையிலெழுதிய மேலான வியாசம் II.

(தொடர்ச்சி.)

செல்வமான மிருகங்களை வளர்க்கும் விதம்.

இரண்டாவதாக, சாந்த மிருகங்கள் சிலவற்றைப்பற்றிப் பேசுவோம். வளர்க்கக்கூடாத மிருகம் ஒன்றுமில்லையாகையால் அல்ப ஜந்துவாகிய அணிலையும், கீரியையும் எடுத்துக்கொள்வோம். மற்ற ஜந்துக்களைக்காட்டிலும் இவ்விரண்டும் மனிதனிடத்தில் பழகுவது மிகவும் இலகுவானாலும், இவைகளை மனிதன் ரக்ஷிப்பது கஷ்டம். கீரி வளர்ப்பவனுக்குப் பாம்பின் பயம் அநேகமாய்க் கிடையாது. இவ்விரண்டு ஜீவன்களும் ஆகாரத் தட்டுப்பாட்டாலும் ஆதரிப்புத் தட்டுப்பாட்டாலும், சீக்கிரத்தில் உயிர்விடுமென்பது திண்ணம். அணில், கீரி வளர்ப்பவர்கள் அவைகளுக்கு நல்ல பால், பழம் முதலியவைகளைக் கொடுத்துத் திருப்திசெய்யவேண்டும். அணிலுக்கு சத்துருக்கள் கணக்கு வழக்கில்லையாகையால் அதைக் காக்கை, பூனை, நாய் முதலியவைகள் தீண்டக்கூடாதபடி நல்ல இடத்தில் வைக்கவேண்டும்.

குரங்குகள் வளர்ப்பதும் கஷ்டமான காரியம். குரங்குக்குட்டிக்கு உயிர்க்கண்டங்கள் பல. ஆயினும் குட்டியாயிருக்கும்போதேதான் அதனைப் பிடித்துப் பழக்கவேண்டியதாயிருக்கிறது. கயிற்றை இடுப்பில் கட்டிக் கொடும்பாவிபோல் அதனை இழுத்துச் செல்கிறார்கள். அதற்குத் தக்க ஆகாரம் அளித்து ஒருவிதக் குறைவின்றி வளர்த்துவந்தால், வளர்ப்பவன் சொல்லிய வண்ணமெல்லாம் கேட்கும். நல்ல குரங்குகளைச் சரியானபடி வளர்த்தால் அவைகள் மனிதனுக்கு வண்டி ஓட்டும். சாணானைப்போல் மரமேறிப் பழம் காய்கள் முதலியவற்றைப் பறித்துக்கொடுப்பதில் வளர்ப்பவனுக்கு ஓர் வேலைக்காரனைப்போலு மாகும். எந்த மிருகமாயினும், குரங்குமட்டுமல்ல, ஆகாரத்தட்டு, அன்புத்தட்டு முதலியவற்றை யடையுமானால் அதன் மன உல்லாஸம் குன்றும். ஆயுள் குறையும்; மனிதனும் அதனை வளர்ப்பதால் கிடைக்கக்கூடிய முழு இன்பத்தையும் லாபத்தையும் அடையான்.

சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்களை வளர்ப்பவர் பலர். இம்மிருகங்களை வளர்ப்பவர்கள் அவைகளிடத்தில் கடுமை காட்டக்கூடாதென்பதற்கும், பக்ஷமாகவே யிருக்கவேண்டுமென்பதற்கும் காரணங்கள் இரண்டுண்டுள. அவற்றுள் முதலாவது எல்லா ஜீவன்களிடத்திலும் அன்புபாராட்ட மனிதன் கடமைப்பட்டவன் என்பது. இரண்டாவது, மிருகங்கள் மாம்ஸபக்ஷிணிகளாய் இருந்தால் அவைகளுக்கு வேண்டிய மாம்ஸமோ அல்லது இலை, கொடி, பழம் முதலியவைகளை யருந்துபவைகளாயிருந்தால் அவைகளையோ, கட்டாயம் தேடிக் கொடுக்கவேண்டும்; அப்படியில்லாமல் மனிதன் அவைகளுக்குக் கொஞ்சம் சிரமத்தைக்காட்டுவானேயானால், அவனுடைய உயிருக்கே தீங்குநேரிட்டுவிடும். மிருகங்களுக்கு அளித்

கும் ஆகாரத்தை, தயை அன்பு என்ற மந்திரங்களோடு கலந்து கொடுக்கவேண்டும்.

நாய் பார்வைக்கு எவ்வளவு அற்ப மிருகம்! கார்யாம்சமாய்ப் பார்ப்பின் அதற்கு ஈடும் உண்டோ? பொதுவாய்த் தெருத்தெருவாய் வெயிலிலும் மழையிலும் அடிபட்டு நடுக்கமுற்றுத் தெருவில் விழும் எச்சில் இலைகளில் மிச்சம் உளதை, வாலைக்குழைத்துக்கொண்டு ஆனந்தமாய் அருந்தி, அவ்வல்ப ஆகாரத்தை அளிப்பவனிடம் பிறகு எவ்வளவு அன்போடும் நன்றியோடும் பழகுகிறது. இப்படி இயற்கையிலேயே உத்தம குணங்களையுடைய எளிய மிருகங்களைச் சிறுவர்கள் கண்டபோதெல்லாம் கல்லாலடித்துக் களிப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. நாய் தானாகவே, மனிதனிடத்தில் பழகவரும் மனிதனையும் தன்னைப் பழக்கி ஆதரிக்க வேண்டுமென்று தன் செய்கைகளால் கேட்கும். எந்த மிருகங்களிடத்தினும் கடுமை காட்டக்கூடாத மனிதன், நிரபராதியானதும் ஏனைய மிருகங்களைப்போல் பேசத் திறமையற்றதும் மனிதனுக்கு அதிக உபயோகமானதுமான நாயை வளர்ப்பது ஸகஜமேயானாலும், இந்த மிருகம்தான் மனிதனிடத்தில் கஷ்டத்தை யனுபவிக்கிறது. இங்கிலாந்துபோன்ற மேனாடுகளில் நாயைப் பிள்ளையினும் பன்மடங்கு கண்ணுக்குக் கண்ணாய்க் காத்துவருகிறார்கள். மனிதனுக்கு இம்மிருகம் உழைப்பது எவ்வளவு என்று கணக்கிட முடியாது. இப்படியிருக்க, அதன் மனமோ காயமோ வருந்தும்படி செய்வதால் மனிதனுக்குப் பயன் யாது? இம்மிருகத்தை அருமையாய்ச் சீராட்டி வளர்த்துக் காலம் சென்ற பலர், தங்கள் மரண சாஸனத்தில் தன் நாய்க்கு இவ்வளவு, குதிரைக்கிவ்வளவு என்று எழுதிவைத் திருக்கிறார்கள்.

யுலிஸீஸ் (Ulysses) இருபது ஆண்டுகள் வெளியில் அலைந்து திரிந்து தாய்நாடு சேர்ந்தும் மினர்வா (Minerva) வின் மாயாசக்தியால் இரப்போன் வேடத்தையடைந்து, தன் மாளிகைவாயில் போனதும் அவனைக் கண்டு அளவில்லா ஆனந்தம் அடைந்து அக்கணமே உயிர் துறந்தது. அவனுடைய அருமை ஆர்கஸ் "Argus" அன்றோ! லெவ்லினின் (Levllyn) குழந்தையைக் காத்தது. கெலர்ட்டன்றோ! லைரஸி (Lyress)ன் சிதையில் விழுந்து தன் யஜமானனோடு சாம்பலானது அவனுடைய செல்வநாய் அல்லவா!

ஆகவே, நாய்க்கு தங்கள் குழந்தைகளுக்குப் போடுவதுபோல் நல்ல படுக்கை, நல்ல அங்கி, நல்ல ஆகாரம் அளித்து அதனை ஆதரிக்க மனிதர்கள் கடமைப்பட்டவர்கள். அப்படி வளர்க்கப்பட்ட நாய்கள் மனிதனுக்கு நன்மையையே நாடும், லாபத்தையே தேடும். பெற்ற பிள்ளைகள்கூட தங்கள் அருமை அன்னை தந்தையரை ஆதரிப்பது அபூர்வம். ஏனென்றால், அன்னமிட்ட வீட்டில் கன்னமிடப் புத்தி, மனித மிருகங்களுக்குத் தோன்றுமேயொழிய, நாய்களுக்குக் கனவிலும் வரவே வராது.

குதிரை வளர்ப்பது மிகவும் சிரமமே. குதிரை மிகவும் அறிவுள்ள பிராணி. மனிதனைக் கடிய வழிகளிலும் நீண்டதூரம் தூக்கிச் செல்வது குதிரையன்றோ! ஜீவராசிகளில் ஒன்றினிடமும் அப்ரியம் பாராட்டக்கூடாத நாம், நமக்குச் சரீரத்தால் உழைத்து, நம்முடைய சிரமத்தைக் குறைத்து லாபத்தையும் ஆனந்தத்தையும் அதிகரிக்கச்செய்யும் அற்ப மிருகங்களாகிற தோட்டங்களின்பால், தயை, அன்பு என்ற சிறு அருவிகளைப் புரட்டி, அவைகளில் வளரும் மன உல்லாஸ இன்பச்செடி கொடிகள் கொழுத்துத் தழைக்கும்படி ஏன் செய்யக்கூடாது?

குதிரையைச் சரியானபடி வளர்த்தால் ஏன் அவைகள் நம் எண்ணத்திற்கிசைய நடக்கா! நல்ல ஆகாரமும் நல்ல ஆதரிப்புமுள்ள குதிரைக்கு சவுக்கு எதற்காக? பொதுவாய் நல்ல வேட்டைக்காரர்களுக்கும் சிப்பாய்களுக்கும் தங்கள் குதிரையின்பேரில் உள்ள அன்பு, தங்கள் குஞ்சு குழந்தைகளிடத்தினும் கூடாது. நல்லஜாதிக் குதிரைகள் தங்கள் யஜமானனுக்காகத் தம் உயிரையும் விடும். பயங்கரமான யுத்தகளங்களில் தங்குதடையின்றி தடதடவென்று தன் யஜமான் செப்பியவண்ணம் ஆபத்தில் அஞ்சாமல் சென்று ஆனந்தமாய் அட்டகாஸம் செய்வது குதிரையன்றோ! இவ்வளவிற்கும் காரணம் என்னவென்று பார்ப்பின், அதற்கு யஜமான் காட்டும் அன்பும், ஆதரிப்பும், கொடுக்கும் அளவான ஆகாரமுமேயாம். சிற்சில ஊர்களில் ஜட்காவண்டியில் கூண்டின்மேலும் பெட்டிமேலும் வண்டிக்குள்ளும் மனி

தர்களை, மூட்டையில் புளி யடைப்பது போல் அடைத்து, குதிரை வண்டியை இழுக்க முடியாமல் தள்ளாடும்போது கொஞ்சம் வண்டியைத் தள்ளிவிட்டுப் பிறகு பெட்டி மேல் உட்காரக்கூட இடமில்லாமல் நின்று கொண்டு பிராணனை வதைக்கும் பாதகர்களுக்கோ உடன்படும்! ஏன் இப்படி வண்டி ஓட்டுபவனைக் காலால் உதைத்தோ வாயால் கடித்தோ பிராணனைப் பதிலுக்குப் பதிலாய் வதைக்க, பின் சொன்ன குதிரைகள் சமயத்தைத் தேடா? ஏன் வண்டிக்காரனும் தினம் ஒரு சவுக்கு வாங்கமாட்டான். ஐயோ! பாபம் சவுக்கு வாங்கும் காசைக்கொண்டு புல்வாங்கிக் குதிரைக்குப் போட்டால் எவ்வளவோ லாபமுண்டே! பாழும் வண்டிக்காரர்கள் குதிரையின் கொள்ளையும் புல்லையும் குறைத்துத் தன் குடியையும் பொடியையுமல்லவோ மிகுத்த காசைக்கொண்டு விருத்திசெய்கிறார்கள்.

எந்த மிருகத்தையும் ஜாஸ்தி வேலைவாங்கக் கூடாதென்பது பொதுவானாலும், குதிரையை ஜாஸ்தி வேலைவாங்கவே கூடாது; ஏனென்றால், ஒரேதடவையில் குதிரையை அதிகதூரம் ஓடும்படி விட்டாலும் அதிக சிரமமான கார்யத்தைச் செய்யும்படி விட்டாலும் குதிரைக்குத் தேகத்தில் உஷ்ணம் ஜாஸ்திப்பட்டு ஜ்வரமுண்டாகி சாவையடையும். குதிரை, ஜ்வரம் வந்தால் பிழைப்பது துர்லபம்.

சிறுவர்கள் கையில் அகப்பட்டுப் படாத பாடுபட்டுப் பிராணனை விடும் மிருகங்களில் ஓணான் ஒன்று. 'ஓணானை அடித்தால் உழக்குப் புண்யம்' என்று சொல்லிக்கொண்டு அவரைப்பந்தல் புடலம்பந்தல் முதலியவைகளில் ஓணானைக் கண்டால் விடாமல் சிறுவர்கள் வதைக்கிறார்கள். இது மிகவும் தெரியாத்தனம். ஒரு அவரைக்காயையும் இரண்டு மூன்று புடலம்பூவையும் ஓணான் தின்னக்கூடாதென்று தடுப்பதற்குத் தினம் எவ்வளவு நிரபராதியான ஓணான்களைக் கொல்கிறது. ஓணானைச் சிரமப்படுத்தக்கூடாதென்பதற்குப் பலவித ஆதாரங்களுண்டு. என்னவென்றால்: பூர்வம் ந்ருக சக்ரவர்த்தி, ஓர் வேதியர் சாபத்தால் வெகுகாலம் ப்ருந்தாவனத்தில் ஓணானாய் இருக்கும்படி நேர்ந்ததாம். இப்படி யெத்தனையோ பெரியவர்கள் சாபத்தேட்டாலோ, பரிக்ஷார்த்தமாகவோ அல்ப மிருகங்களின் உருவங்களை எடுக்கும்படி நேரிடும். அப்படிப்பட்ட ஸ்திதியிலிருப்பவர்களை நாம் வதைக்கும்படி நேர்ந்தால் அது மஹா பாபமாகும்! ஐயோ நாம் எப்படிக் கடைத்தேறுவது?

பாகவதத்தில் தசம ஸ்கந்தத்தில் கண்ணபிரான் ஒரு ஸமயம் பலவித புஷ்பங்களைப் பற்றிப் பேசியதாகச் சொல்லுங்கால் எங்கும் பராபரமாய்த் தீனதயாளுவாய் விளங்கும் சாக்ஷாத் ஜகதீசனைக்குறித்துச் செய்யும் மானஸீக பூஜைக்கு, தயை என்ற புஷ்பமே உத்தம புஷ்பம் என்று சொல்லியதை மறந்து, ஈசன் எண்ணத்திற்கு மாறாகவும், ''அஹிம்ஸா பரமோ தர்ம:'' என்ற நீதி வாக்யத்தைச் சிந்தியாதும் பெரியோர் ஆணைக்கு எதிராகவும்ப்ராணி ஹிம்ஸைசெய்ய ஓர் ஹிந்துவும் துணிவனோ! அப்படியும், மீறிச் செய்பவனை மனிதனென்றும் சொல்லலாமோ!

மிருகண்டு மகரிஷி பால்ய சேஷ்டைகளில் ஒன்றாய் ஈக்களைக் கொன்று துடைப்பக் குச்சியில் குத்திக் கோர்வைசெய்து ஆனந்தித்து வந்ததற்காக, பரத்தில் படாத பாடுகள் பட்டார் என்று கேட்டும் ஹிம்ஸை செய்யும் ஹிந்துமதஸ்தனை எந்த இனத்தோடு சேர்க்கலாம்!

வ்யவஸாய நாடாகிய நம் நாட்டில் ஆடு மாடுகளின்பேரில் ஜனங்களுக்கு அளவற்ற ஆசை யிருக்கவேண்டும்; இருந்துகொண்டும் வருகிறது. பசுக்களை ஹிந்துக்கள் தெய்வமாகக்கொண்டு வணங்குவது ஸகஜமாயிருக்கும்போது அவைகளின்பேரில் ஆசைகொள்வது மிகவும் ஸகஜமே. பசுவைப் பால் கொடுக்கும் காலம்வரையில்தான் ரக்ஷிப்பது, பிறகு திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை யென்றிருப்பது மிகவும் பிசகு. சரியானபடி எக்காலத்திலும் பசுக்களுக்கு ஆகாரம் போட்டு நல்ல இடத்தில் கட்டிவைக்கவேண்டியது, எப்பொழுதும் வண்டிக்கும் உழவிற்கும் தக்க காளைகளை விரும்புவது வ்யவஸாயிகளின் பொறுப்பு. நாம் காளைகளை வண்டியில் பூட்டி மணிச்சவுக்கால் தயையின்றி அடித்துச் சொருகு தாற்றுக்கோலால் குத்தி ஒட்டவும் எவ்வளவு பாத்யம் நமக்கிருக்கின்றதோ அதனிலும் பன்மடங்கு ஜாஸ்தியான பாத்யம் அவைகளுக்கு உண்டாகும் நோவு நொடி

களைத் தீர்ப்பதில் நமதிடத்தில் உண்டென்று ஒவ்வொரு வ்யவஸாயியும் எண்ணவேண்டியது. இதைப்பற்றி யோசிக்குங்கால் "மாடு முக்கிவர வீடு நக்கிவரும்." "குண்டை குன்ற குலம் குன்றும்" என்ற இரண்டு வசனங்களும் யோசிக்கவேண்டியவைகள். கதையில், அட்ரி ப்ரபு குதிரை வளர்த்ததுபோலில்லாமல் உபயோகமில்லாத காலம் வந்தாலும் தேகத்தில் திறமையிருந்தகாலத்தில் உழைத்ததற்காகத் தள்ளாமையை யடைந்தகாலத்தும் மிருகங்களை ரக்ஷிக்கவேண்டிய தவசியம். மாட்டுப்பொங்கலன்று மாடுகளைப் பூஜிக்கிறது மற்றத் தினங்களில் பட்டினிபோட்டுப் புடைக்கிறதென்று மனிதன் வைத்துக்கொள்ளவேகூடாது.

பன்றி ஆடு முதலியவைகளைப் பலர் ஆகாரார்த்தமாக வளர்க்கிறார்கள். ஜனங்களெல்லாரும் மாம்ஸபக்ஷணம் செய்யக்கூடாதென்பது பிசகு என்று தடுக்கமுடியாத கார்யமானாலும், அவைகளை நாளடைவிலே வதைத்து அவைகளின் மனதைப் புண்படுத்தாமல் ஸமயத்தில் திடீரென்று கொன்றுபோடுவது ஏதோ கொஞ்சம் நல்லதென்று சொல்லலாம். ஆனாலும் கொல்வதென்பது மிகவும் கொடிய தொழில். சென்ற வருஷம் ப்ரான்ஸ் (France) தேயத்தில், ஓர் பாலத்தின்மேல் ரெயில் வண்டி போகும்போது தவறி ஆற்றில் விழுந்த கரி தள்ளுவோனை (Stoker) ஓர் பன்றி ரக்ஷித்ததென்றால், பன்றியும் மனிதனால் கொல்லக்கூடிய மிருகமோ? இந்தியாவில் தெலுங்குத் தேசங்களில் இம்மிருகத்தை ஈட்டிகளாலும் முளைகளாலும் குத்திச் சித்திரவதை செய்கிறார்களென்றால் அது என்ன பரிதாபமான செய்கை! கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் ஆட்டுக்கடாக்களை தேரின் சக்ரத்தில் போட்டு வதைக்கிறார்களென்றால் இதைவிட மனிதனின் மனதிற்குக் கடூரமானது வேறு என்ன?

இயேசுவோ—"Kill not or cause others to be killed"—"கொல்லாதே அல்லது வேறொன்றைப் பிறர் கொல்லும்படி பார்க்காதே" என்று சொல்லவில்லையோ! பௌத்தர் பௌத்த மதஸ்தாபனம் செய்தது கொல்லுதலாகிய கொடூர செயலை மனிதன் செய்யக்கூடாதென்றன்றோ! ஜயினர்கள் ஈ எறும்பு முதலியவைகளுக்கு ப்ராணாபாயம் ஏற்படும் என்று பயந்தல்லவோ இராப்போஜனம் செய்கிறதில்லை. மகம்மதியர் வேதமாய்க்கொள்ளும்கொரானிலும் ("Koran") பசுவைப்பற்றிப் பேசுங்கால் 'அவள் பால் மருந்து, அவள் மாம்ஸம் 'விஷம்' என்று சொல்லியிருக்கவில்லையோ? இப்படிக் கொல்வது கெடுதல் என்று கிறிஸ்தவமதம், ஜயின மதம், மகம்மதியமதம், பௌத்தமதம், ஹிந்துமதம் முதலிய மதங்களில் கூறியிருக்கும்போது, "கொன்றால் பாபம் தின்றால் போகும்" என்ற பழமொழியின் உள்ளர்த்தம் தெரியாமல் உளறிக்கொண்டு ஆட்டுக்கடா கோழி முதலியவைகளைப் பிள்ளைக்குப் பிள்ளையாய் வளர்த்து ஏன் காளிமுதலிய கொடிய ரத்தாசைகொண்ட தெய்வங்களுக்குப் படைக்கவேண்டும்? பழமொழியின் அர்த்தமோ சுருக்கமாய்ச் சொல்லின், கொல்வது என்பது ஓர் ஜீவராசிக்கு துன்பத்தைக் கொடுக்கும் ஓர் செய்கை. தின்பது என்பது ஓர் அநுபவம். ஆகையால், தான் செய்த கார்யத்தின் பலாபலனைத் தானே யனுபவிக்க வேண்டுமென்பதேயாம். இவ்வுண்மை தெரியாமல், அப்பழமொழி, தம் செய்கைக்கு ஆதாரமானதென்று சொல்லிக்கொண்டு தீங்கை மேன்மேலும் எளிய ஜீவன்களுக்குச் செய்துகொண்டு, பரத்தில் தங்களுக்கும் தீங்கைக் குவித்துக்கொள்கிறார்கள்.

முன்காலத்தில் கொல்லும் தொழிலை நிந்தனையாகச் சிந்தையில்கொண்ட பெரியோர்கள் கொன்று தின்பதென்ற பெயரைத் தள்ளி, பலி போடுவதென்று சொல்ல வாரம்பித்தார்கள். எந்த விஷயமானாலும் ஓர் உயிரைக் கொல்லக்கூடாது என்பது.

> "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத்து உண்ணாமை நன்று"

என்ற தெய்வப்புலமைவாய்ந்த திருவள்ளுவர் சொல்லியிருப்பதிலிருந்து புலப்படவில்லையோ? இப்படிச் சாக்குச்சொல்வது எப்படி இருக்கிறதென்றால், மனிதனே கொல்லும் தொழிலை வெறுத்தானானாலும் முற்றிலும் வெறுக்கவில்லை யென்பதுபோலும், கொல்லப்பிரியப்பட்டாலும் பழியைக் கடவுளிடத்தில் தள்ளினார்கள்போலும் இருக்கின்றதேயொழிய வேறில்லை. அப்படியானால் மனிதனுக்குப் பழிச்சுமையைத் தள்ள நல்ல விடம்தான்! ஐயோ! மனிதன் பழியைத்

தக்கவிடத்தில் தள்ளிவிட்டதாக முட்டாள் தனமாய் எண்ணிக் களிக்கிறான். ஆனால் அவனுடைய பழியென்ற பஞ்சுப்பொதி நீரில் விழுந்துவிட்டது. அதனை அவன் பரலோகத்தில் தூக்கும்போதல்லவோ அதனுடைய பளுத் தெரியவரும்.

ஆகையால், பூலோகத்தில் வளர்க்கமுடியாத ஜந்து ஒன்றுமில்லை. ஈயையும் வளர்க்கலாம், யானையையும் வளர்க்கலாம். மிருகங்களிடத்தில் தயை என்ற நீரைக்கொண்டு க்ரியை என்ற முரட்டுத்தோலை நனைத்தால் தான் மனிதனுக்கும் ஸுகம் ஜாஸ்தி, மிருகங்களுக்கும் சிரமம் குறைவு. மிருகங்களை வளர்ப்பவன் அவைகளிடத்தில் தன்னுடைய தயை, அன்பு, பரிதாபம் ஆகிய மூன்று குணங்களையும் நன்கு காட்டவேண்டும். லாபார்த்தமாக மிருகங்களை வளர்ப்பவர்கள் கூட முதலில் லாபத்தை யோசிக்கக்கூடாதென்பதும், மனிதன் ஒரு ஜீவனையும் ஹிம்ஸிக்கக் கூடாதென்பதும் அவனே உயிர்வகை பலவிற்கும் மூத்த ஸகோதரனாக விருந்து தன் ஊமை இளைய ஸகோதரர்களாகிய இதர மிருகங்கள் எவ்விதத்திலும் வருத்தமுறாமலிருக்கும்படி செய்யவேண்டியது என்பதும் நன்கு புலப்படுகிறது.

ஓர் அருமையான பிரசங்கம்.

சென்ற வருஷம் பாங்குவெடிங்க் ஹாலில் கூடின சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தின் வருஷாந்த மஹா சபையில் 1910-ம் வருஷத்திய ரிபோர்ட்டைச் சபையார் அங்கீகரிக்கும்படி அருள்பொருந்தின ஆர்ச் பிஷப் ஆலென் துரையவர்கள் பிரேரித்த போது, ஜந்துக்களின் சம்ரக்ஷணையைப்பற்றியொரு உபந்நியாசஞ் செய்தார். அதன் சாராம்சமாவது:—இக்காலம் தர்மம் ஒழுங்காய் நடந்துவருகிற காலமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏழைகளின் குழந்தைகளுடையவும் தாய்தந்தையரில்லாத குழந்தைகளுடையவும் பரிதாப நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காக அநேக ஸ்திரீ புருஷாள் பலவிதமான ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். தர்ம ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டு அவைகளில் தேர்ந்த வைத்திய சாஸ்திரிகள் நியமிக்கப்படுகிறார்கள். வயது முதிர்ந்தவர்களும் திக்கற்றவர்களும் தரும சமாஜங்களில் காப்பாற்றப்பட்டு வருகிறார்கள். பைத்தியம், தொழுநோய் முதலிய தீராத கர்ம வியாதிகளால் அவஸ்தைப் படுகிறவர்களுக்குப் பிரத்தியேகமான வைத்தியசாலைகள் கட்டப்பட் டிருக்கின்றன. ஆகையினால் இக்காலத்தில் அநேக விஷயங்களில் சீர்திருத்தமுண்டாக வேண்டியதாயிருந்தாலும், ஜனங்கள் தருமசிந்தை யற்றவர்களா யிருக்கிறார்களென்பதற் கிடமேயில்லை. ஏனென்றால், இக்காலத்தவர்கள் மானிட தேக முள்ளவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனிக்கிறதேயன்றி வாயில்லாப் பிள்ளைகளைப்பற்றியும் கவலை யெடுத்துக்கொண்டு அவைகளுக்கு விளைகிற ஹிம்ஸைகளைத் தடுப்பதற்காகச் சங்கங்களு மேற்பாடு செய்து வருகிறார்கள். பிராணிகள் மனிதர்களைப் போலத் தங்களுடைய குறைகளை வாய்விட்டுச் சொல்ல முடியாதனவாகையால், அவைகளிடத்தில் நாம் அதிக தயையுள்ளவர்களாயிருக்கவேண்டும். மேலும், அவைகளால் நமக்குக் கிடைக்கிற பலவித நன்மைகளுக்குப் பிரதியுபகாரமாக அவைகளினிடத்தில் பக்ஷமாயிருக்கவேண்டும். அதுவேயல்லாமல் ஜந்துக்களும் கடவுளின் சிருஷ்டியின் ஓர் பகுதியல்லவா? இரக்கமில்லாமல் பிராணிகளை ஹிம்ஸிக்கிறவன் அதிக அபாயகரமானவனாகையினால் அப்படிப்பட்டவர்களுடைய சிநேகமே செய்யலாகாது. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற உயிருள்ளதும் உயிரில்லாததுமான ஒவ்வொரு பொருளினாலும் எவ்வளவோ பலனுண்டு. அப்படியிருக்க, அந்தப் பலன்களை நாம் நன்றாய் அனுபவிக்காமல் அப்பொருள்களையே நாசஞ் செய்துவரலாமா? வானத்தில் அதியற்புதமாய்ப் பாடுகிற பக்ஷிகளும் மனிதனால் பாவிக்கவும் முடியாதவண்ணம் பல நிறங்களும் அதிக அழகும்வாய்ந்த சிறகுகளையுடைய பறவைகளும் அவைகளை நமக்காகப் படைத்த கர்த்தருடைய எல்லையற்ற கருணையையும் அபாரசக்தியையும் விளம்புகின்றன. மனித சஞ்சாரமில்லாத விடங்களில் பறவைகள் வெருளுகிறதில்லையென்றும் அங்கேயுள்ள மிருகங்கள் மனிதன் அவைகளின் சத்துருவாக வந்திருக்கிறானென்று அறிந்து கொள்ளுகிறவரையில் உக்கிரமாயிருக்கிற

தில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள். அது உண்மையா யிருக்கும்பக்ஷத்தில், மனிதர் மிருகங்கள் பறவைகள்முதலிய சிருஷ்டியி லுள்ள ஜீவன்களின் அமைதியைக் கெடுக் கும்படியான காரியங்களைச் செய்வது வெகு குரூரம். அவைகளைத் தொந்தரவு செய்யாம லிருந்தால் பிராணிகள் கூச்சத்தை யிழந்து நம்மருகில் வரும். அதற்குத் திருஷ்டாந்த மாக வநேக கைதிகள் தங்களுடைய சிறைச் சாலைகளில் எலி, மூஞ்சூறு, சிலந்திப்பூச்சி முதலிய பிராணிகளுடன் நட்புகொண் டிருந்ததாகக் கேள்விப்பட் டிருக்கிறோம்.

முற்காலத்தில் யூதர்களுடைய நாட்டி லேற்பட்ட சட்டங்களில் தானியங்களைச் சுமந்து செல்லுகிற எருதுகளின் வாயைக் கட்டக்கூடா தென்றொரு சட்டம் விதிக் கப்பட் டிருந்ததாம். 'புறாவின் பேதைமை யும் ஆட்டுக்குட்டியின் சாந்தத்தன்மையும்' என்று சாதாரணமாய் வழங்கப்படுகிற உப மான வாக்கியங்கள் வேதங்களினின்றும் எடுக்கப்பட்ட மேற்கோ ளல்லவா?

தயையென்னுங் குணமே உருவமெடுத்த தோ வென்று சொல்லப்படுகிற பிளாரென்ஸ் நைடிங்கேல் (Florence Nightingale) என் னும் ஆங்கிலேய ஸ்திரீ தான் சிறுபெண்ணா யிருக்கையில் வளர்த்துவந்த பறவையொன் றுக்கு ஏதோ நோய் கண்டபோது அதை வெகு ஜாக்கிரதையாய் ஆதரித்ததை அவர் பிற்காலத்தில் செய்த பலவித தருமகாரியங் களுக்கு மகா ஆதார பீடமாகவல்லவோ கூற வேண்டும்.

அநேக சிறுவர்கள் இயற்கையாய்ப் பிரா ணிகளிடத்தில் கொடுமையுள்ளவர்களா யிருக்கின்றார்கள். அதைச் சிறுவயதிலேயே திருத்தாமற்போனால் பெரியவர்க ளானபிற கும் அந்த சுபாவம் மாறுகிறதில்லை. ஆகை யால் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும், இளவயதிலேயே பிராணிகளை ஹிம்சிக்கக் கூடாது, அவைகளினிடத்தில் அதிக இரக் கம் கொள்ளவேண்டும், அவைகளுக்கு ஏதா வது துன்பம் வந்தால் அதைப் பரிஹாரஞ் செய்ய முயலவேண்டுமென்கிற நீதிகளைக் கற்பித்துவருவது அவசியம்.

இந்தியாவில் பாம்புக்கடி.

நம்முடைய தேசத்தில் வருஷந்தோறும் பாம்புகளால் கடிக்கப்பட்டு அநேக ஜனங் கள் மாள்வதைப்பற்றி யோசித்துப்பார்க்கை யில் அதிக விசனமுண்டாகிறது. பாம்பு கடித்தவுடனே பர்மாங்கனேட் ஆப் பொ டாஷ் (Permanganate of Potash) என் கிற மருந்தை கடித்துண்டான காயத்தில் விட்டால் அவ்விஷம் தேகத்தி லதிகமாய்ப் பரவாமல் பிராணனைக் காப்பாற்றலாமென்று வைத்திய சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள். ஆனால் அம்மருந்தினால் பிரயோ ஜனமடைவதற்கு, அதைத் தக்ஷணமே பிர யோகிக்கவேண்டும். அவ்வாறு கடித்த க்ஷணத்திலேயே அம்மருந்து கிடைப்பது எல் லாருக்கும் சாத்தியமில்லை. எல்லா ஜனங் களுக்கு மெளிதில் கிடைக்கக்கூடியதும் எப் பொழுது பிரயோகித்தாலும் குணத்தைத் தரத்தக்கதுமான ஔஷதமொன்று தற்கா லத்து வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடி யாதபக்ஷத்தில் பாம்புகளின் தொகையை யாவது குறைக்கப் பிரயத்தனப்படலாம். அதற்காக பாம்புகளைக் கொல்வதற்கு வெகு மதிக எளிக்க ஏற்பாடுகள் செய்தார்கள். இந்தப் பிரயத்தனம் வீணாய்ப்போயிற்று. ஏனென்றால், வெகும்திகளுக்காகவென்றே அநேகர் பாம்புகளை வளர்க்க வாரம்பித் தார்கள்.

தென்னாப்பிரிக்காவிலும் சூடான் முதலிய தேசங்களிலும் பாம்புகளின் தொகையைக் குறைப்பதற்கு இயற்கையாகவே ஒரு வழி யமைந்திருக்கிறது. அதாவது அவ்வூர்களில் செக்ரிடெரிப்பறவைகள் (Secretarybirds) என்று ஒரு ஜாதிப் பறவையுண்டு. அவை ஏராளமாய்ப் பாம்புகளைக் கொன்று தின்கின் றன. நம்முடைய நாட்டில் அப்பறவைக ளுக்குப் பதிலாகக் கீரிப்பிள்ளைக ளிருந்த போதிலும், அந்த செக்ரிடெரிப் பறவைகளை நம் நாட்டுக்குக் கொண்டுவந்து பாம்பின் வைரியினங்களை விருத்திபண்ணினால் நம் முடைய முயற்சி சிறிது பலனடையுமென் றெண்ணுகிறோம். செக்ரிடெரிப் பறவைகள் ராஜாளியைப்போன்ற ஒரு ஜாதிப் பக்ஷிகள். ராஜாளிப் பறவைகள் நம் நாட்டி லதிகமா யிருக்கின்றன. அதைப்போலவே செக்ரி

டெரிப் பறவைகளையும் இந்நாட்டி லியற்கை யாயுள்ள பறவைகளைப்போல் செய்துவிட லாம். பாம்புகளைக் கொல்வதில் அது மிகவு முபயோகமுள்ளதென்றே அவைகளைத் தென் னுப்பிரிக்காவில் வளர்க்கிறார்களென்று சொல்லுகிறார்கள். அவை பாம்பைக் கொல் லும்பொழுது அவ்வகளின் பலமான கால் களினால் பாம்பின் தேகத்தை மிதித்துக் கொண்டு கொல்லுகின்றனவாம்.

இவ்விஷயத்தில் ராஜாங்கத்தார் கொஞ் சம் சிரத்தையெடுத்துக்கொண்டு அப்பறவை களை நம்முடைய நாட்டுக்குக் கொண்டு வந்து ஒரு தோட்டத்தில் வைத்து வளர்த்து அவைகளின் தொகையை யதிகமாக்கினால் அதிக நலமாயிருக்கும். முதலில் அப்பற வைகளை வளர்ப்பதில் சமர்த்தனாயிருக்கிற வொருவனை ஆப்பிரிக்காவிலிருந்து வரவ ழைத்துத் தோட்டங்கள் ஏற்படுத்தி அப்பற வைகளின் தொகுதி அதிகரித்தபிறகு அத் தோட்டங்களை யெடுத்துவிடலாம். அத் தோட்டங்களைப் பார்த்து ஜனங்கள் தாங் களே அம்மாதிரி தோட்டங்க ளேற்படுத்திக் கொண்டு அந்தப் பக்ஷிகளை வளர்ப்பார்க ளென்பது திண்ணம்.

கோமாரியை அடக்கும் சபைகள்.

நம்முடைய தேசத்தில் வேளாண்மையை விருத்திசெய்வதற்காகராஜாங்கத்தார் அநேக ஏற்பாடுகள் செய்துவருகிறார்க ளென்பது நிச்சயம். நம் தேசத்தாரும் ராஜாங்கத்தா ருடன் கலந்து உழைத்தால்தான் அவர்க ளுடைய பிரயத்தனங்கள் பயனடையும். ராஜாங்கத்தாருடனேயன்றி ஜனங்கள் ஒரு வரோடொருவர் கலந்து பிரயாசைப்பட வேண்டும். பயிர்த்தொழில் நன்றாய் விருத் தியடைய வேண்டுமானால் ஆரோக்கியமுள்ள கால்நடைகளில்லாமல் முடியாது. ஆகை யால் நாம் கால்நடைகளை வியாதிகளினின் றும் எவ்வாறு காப்பாற்றலாமென்கிற விஷ யத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டியது அதிக அவசியம். இவ்விஷயத்தைப்பற்றி ராஜாங் கத்தார் போதுமானவளவு பிரயத்தனப்படு கிற தில்லையென்று சொல்வதற்கிடமில்லை. ஏனென்றால், கால்நடைகளின் வியாதிகளைத் தீர்ப்பதிலும், நல்ல ஜாதி கால்நடைகளை யிறக்குமதி செய்து அவைகளைப் பெருக்கு வதிலும், அவைகளுக்கு நல்ல வுணவைத் தரும்படியான பயிர்பச்சைகளை விளைவித்துப் பஞ்சகாலங்களிலு மவைகளுக் குபயோகமா கும்படி தீனியைச் சேகரித்து வைப்பதிலும் அவர்க ளெவ்வளவோ பிரயாசை யெடுத்துக் கொள்ளுகிறார்கள். இவ்விஷயங்களில் ஜனங் களும் ராஜாங்கத்தாருடன் கலந்து உதவி செய்யாமல் முற்காலத்து மௌடீகத்திலேயே மூழ்கியிருக்கிறார்க ளென்பதைப்பற்றி நினை க்குந்தோறும் மிகவும் விசனமாயிருக்கிறது. கோமாரிவியாதியை பிரஜைகள் ஏதோவொரு தெய்வமென்கிற எண்ணங்கொண்டு அதை நிவர்த்தி செய்வதற்கு யாதொரு பிரயத்த னமும் பண்ணாம லிருந்துவந்ததினால் அந்த வியாதி நம்தேச முழுவதும் பரவி தற்காலத் தில் அதனால் மாணமடைகிற கால்நடைக ளின் தொகை பயங்கரமாக அதிகரித்துவிட் டது. தயைநிறைந்த நம்முடைய கவர்ன் மெண்டார் இதைக் கண்டு அதிக விசன மடைந்து கோமாரிவியாதியை விலக்குவ தற்காகக் கால்நடைகளின் தேகத்தில் ஒரு விதப் பாலை விடுவித்தால் நலமென்று கண்டு பிடித்து அங்கங்கே சென்று கால்நடைக ளுக்கெல்லாம் அம்மை குத்துவதற்காக வென்று ஒரு சேனையை யேற்பாடு செய்வ தற்காக உத்தரவு கொடுத்திருக்கிறார்கள்.

கோமாரிநோய் வந்தபின் அதை நிவர்த் திக்க யத்தனப்படுவதைக்காட்டிலும், அது வருவதற்கு முன்னமே அதிக ஜாக்கிரதை யுடன் இருந்தால் அது அதிகமாய்ப் பரவாம லிருக்குமென்று ராஜாங்க உத்தியோகஸ்தர் ஜனங்களுக்கு எவ்வளவுதான் சொன்னபோ திலும் அதை யவர்கள் கேட்காமல் மூடத் தனமாயிருந்து அநியாயமாய்க் கால்நடை களைக் கொல்லுகிறார்கள். கோமாரி கண்ட வுடன் நோய்கண்ட ஜந்துக்களினின்று அது காணாத ஜந்துக்களைப் பிரித்துக்கொண்டு போகவேண்டியது முக்கியம். இதைச் செய் வதில் யாதொரு கஷ்டமுமில்லை. அவ்வாறு செய்வதின் பயனோ சொல்லிமுடியாது. கொஞ்சகாலத்திற்குமுன் வைனாடு மாகா ணத்தில் கோமாரி கண்டபோது இந்திய ரயத்துகளின் கால்நடைகள் கணக்கில்லா மல் மாண்டுகொண்டிருக்க ஐரோப்பியர்க ளின் கால்நடைகளுக்கு அந்த நோய் வர வேயில்லை. அதன் காரணத்தை யறிவதற்கு

அதிகப் பிரயாசைப்பட வேண்டியதில்லை. கோமாரிநோய் அவ்வூரில் சில பசுக்களுக்குக் கண்டிருக்கிறதென்ற சங்கதி தெரிந்தவுடன் ஐரோப்பியர்களெல்லாம் அவரவர்களின் கால்நடைகளைக் கொஞ்சதூரம் ஓட்டிக்கொண்டுபோய் வைத்துக் காப்பாற்றினார்கள். சுமார் ஒரு வருஷத்துக்குமுன் எழும்பூரில் கோமாரிநோய் வியாபித்திருந்தது. கவர்ன்மெண்டு கால்நடைகள் சிறிது தூரம் கொண்டுபோய் வைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டன. கிராமத்தாருடைய கால்நடைகள் அதிகமாய் இறந்தன. ஏனென்றால் அவர்கள் மாரியம்மன் தெய்வத்தினிடத்தில் மூடபக்தி வைத்து, அந்த நோயை விலக்குவது மனிதர்களுக் கசாத்தியமென்று நினைத்து, அதற்காக வொருவிதப் பிரயாசையு மெடுத்துக்கொள்ளவில்லை. ஜனங்கள் இவ்வாறு மூடத்தனமாயிருக்கையில் ராஜாங்கத்தார் எவ்வளவு பணம் செலவழித்தாலும் எவ்வித ஏற்பாடுகள் செய்தாலும் என்ன பிரயோஜனமுண்டாகும்? இதனால் பயிர்த்தொழிலுக்கு எவ்வளவு நஷ்டமுண்டாகுமென்று யோசித்துப் பாருங்கள்!

சில நாளைக்குமுன் மலேரியா என்கிற ஜ்வரத்தை நிவர்த்திப்பதற்காக ராஜாங்கத்தார் செய்த ஏற்பாடுகளை நாகரிகமடைந்த ஜனங்கள்மட்டும் அங்கீகரித்தார்களே யொழிய நம்முடைய தேசத்தில் எந்த ஏற்பாடுகளும் சாவகாசமாய்த்தான் நிறைவேறுதலடையுமென்பது நாமெல்லா மறிந்த விஷயமே. அவ்வித ஏற்பாடு கோமாரிநோய் விஷ்யத்திலும் ஏன் செய்யக்கூடாது? வாந்திபேதி, பிளேக், மலேரியாமுதலிய வியாதிகளை விலக்குவதுபோலவே கோமாரியையும் நீக்குவதற்குத் தகுந்த மார்க்க மெதுவென்றால் அதை வராமல் தடுப்பதே. இந்த நோய் கால்நடைகளுக்கு வந்தபிறகு அம்மை குத்தினால் கொஞ்சம் குணமாயிருக்குமே யொழிய, நோய்கண்டபிறகு அதைப்போக்க யத்தனிப்பதைக்காட்டிலும் அது வராமலேயிருக்கும்படி முன் ஜாக்கிரதை யெடுத்துக் கொள்வது மிகவும்பிரயோஜனமுள்ளதாகும்.

இந்த வியாதியைப் பலவிதங்களில் நீக்கலாம். அவையாவன:—நோய்கண்ட மிருகங்களை மற்றவைகளினின்றும் வேறுபடுத்துவது, கொட்டகைகளை மருந்தூற்றிச் சுத்தி செய்வது, இந்நோயினாலிறந்த ஜந்துக்களின் பிணங்களை அதிக ஆழமாய்ப் பள்ளங்கள் தோண்டிப் புதைப்பது, கால்நடைகள் குடிக்கிற ஜலத்தை யசுத்தமாக்காமல் காப்பது முதலியவைகளே. இவைகளை யனுசரிக்கும் முறையைக் கால்நடைகளை வளர்க்கிறவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்களுக்குப் போதிக்கவேண்டிய தொழில் ராஜாங்கத்தாரையும் நாகரிகமடைந்த ஜனங்களையும் பொறுத்தது. ஒவ்வொரு கிராமத்திலும் புத்திசாலிகளான ஜனங்கள் ஒன்றுசேர்ந்து சபைகூடி மேற்கூறிய ஏற்பாடுகளைச் சுலபமாய்ச் செய்துகொள்வதற்குத் தகுந்த உபாயங்களைப்பற்றிச் சம்பாஷித்து எப்பொழுதோ ஒருதடவை அம்மை குத்தும்பொருட்டு வருகிற ராஜாங்க உத்தியோகஸ்தர்களையே நம்பியிராமல் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் உபகரித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்துவரும் பக்ஷத்தில் நம் நாட்டுக் கால்நடைகள் அபிவிருத்தியடைந்து வேளாளர்களுக்கு எண்ண முடியாத மேன்மை யுண்டாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

வர்த்தமானக் குறிப்பு.

கோடகில் ஜீவஹிம்சை.—கொடகு நாட்டில் வண்டி யெருதுகளுக்கும் உழவு மாடுகளுக்கும் செய்யப்பட்டுவருகிற ஹிம்சையை நிவாரணம் பண்ணுவதற்காக மற்றவிடங்களைப்போலவே யங்குமொரு ஜீ. ஹி. நி. சங்கத்தை ஸ்தாபித்தால் நலமாயிருக்குமென்று சென்னை மெயில் பத்திரிகையில் எழுதப்பட்ட யோசனையைக் காணச் சந்தோஷமாயிருக்கிறது. அதற்கு அதிக முதற்பணம் வேண்டியதாயிருப்பதினால் தற்கால மிது நடப்பது கஷ்டம். ஆயினும் போலீஸ்காரர்களுக்கும் ஜந்து வைத்தியர்களுக்கும் சங்கத்தின் வேலையைச் செய்வதற் கதிகாரம் கொடுக்கலாம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1912.